## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1983 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, மினுவாங்கொடை பௌத்த இளைஞர் கழக (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*[1983, ஓகத்து மாதம் 10 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1983, ஓகத்து மாதம் 12 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 45* *தபாற் செலவு : சதம் 50*

## 1983 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, மினுவாங்கொடை பௌத்த இளைஞர் கழக (கூட்டிணைத்தல்) சட்டம்

[1983, ஓகத்து மாதம் 10 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 01/83

1550

### மினுவாங்கொடை பௌத்த இளைஞர் கழகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்.

"மினுவாங்கொடை பௌத்த இளைஞர் கழகம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச், சொல்லப்பட்ட கழகத்தோடு சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றுவதற்கும் கொண்டுநடாத்துவதற்குமென மினுவாங்கொடையில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டிருந்ததாதலாலும் : முன்னுரை.

சொல்லப்பட்ட கழகமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் அது இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1983 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, மினுவாங்கொடை பௌத்த இளைஞர் கழக (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும், இதனகத்துப்பின்னர் "கழகம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும் மினுவாங்கொடை பௌத்த இளைஞர் கழகத்தின் தற்போது உறுப்பினராகவுள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராக இதன்மேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "மினுவாங்கொடை பௌத்த இளைஞர் கழகம்" என்னும் பெயர் மகுடத்தின் கீழ் இடையறுவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும் ; அத்துடன் அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதோடு அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும். மினுவாங்கொடை பௌத்த இளைஞர் கழகத்தைக் கூட்டிணைத்தல்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :— கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) பௌத்த தர்ம கற்கைக்கும் அதைப் பரப்புவதற்கும் ஆன வசதிகளை ஏற்பாடுசெய்தல் ;

(ஆ) பௌத்த தர்மத்தைக் கடைப்பிடித்தொழுகுதலை ஊக்குவித்தல் ;

(இ) பௌத்தர்களிடையே ஒற்றுமையையும், ஒத்துழைப்பையும் மேம்படுத்தல் ;

(ஈ) உறுப்பினர்களின் அறிவியல், பண்பாட்டு, உடலியல், சமூக சேம நலனை முன்னேற்றுதல் ; அத்துடன்

(உ) பௌத்தர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

4. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள், வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களைக் கடனெடுக்கவும் அல்லது திரட்டவும், மானியக்கொடைகளையும் நன்கொடைகளையும் பெறவும், சேகரிக்கவும், அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆளணியினரை வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலைநீக்கம் செய்தல் ஆகியவற்றுக்கும் ஆன தத்துவங்களும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், பதவிதாங்குநர்களையும் கூட்டுத்தாபனத்தின் விதிகளில் ஏற்பாடுசெய்யப்பட்டு அவ்விதிகளுக்கு இணங்கத் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய அத்தகைய வேறு ஆட்களையும் கொண்டமைந்த முகாமைச் சபையொன்றினால், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய நிருவகிக்கப்படல் வேண்டும்.

(2) இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் பதவிவகிக்கும் கழகத்தின் முகாமைச் சபையே கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச் சபையாக அமைதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

6. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்காகவும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்காகவும், இச்சட்டத்தின் நெறிகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் ஒவ்வாதனவாகவிராத அத்தகைய விதிகளை, உறுப்பினரின் ஏதேனும் பொதுக்கூட்டத்திலும், சமூகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டுக்குக் குறையாத எண்ணிக்கையினரின் வாக்குகளைக் கொண்டும் காலத்திற்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டவிடத்து, அதேபோன்ற கூட்டத்திலும் அதே முறையிலும் மாற்றப்படலாம், அவற்றிற்கு எதுவும் சேர்க்கப்படலாம், அல்லது அவை திருத்தப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

கழகத்தினால் செலுத்தப்படற்பாலனவான அல்லது கழகத்திற்குச் செலுத்தப்படற்பாலனவான தனிசுகள்.

7. இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் கழகத்திற்கு உள்ள எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும், கூட்டுத்தாபனத்தால் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், கழகத்துக்கு வருமதியான எல்லாத் தனிசுகளும், கழகத்துக்குச் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும் உதவுதொகைகளும் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

8. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசையுள்ள, அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும் வைத்திருக்கவும் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகை கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுள்ள முழுத் தத்துவத்துடன், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், சொல்லப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும், கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும். கூட்டுத்தாபனம் அசையுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.

9. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கௌரவ பொதுச் செயலாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் என்பதுடன், கௌரவ பொதுச் செயலாளரினதும் அத்துடன் ஒன்றில் தலைவரினதும் அல்லது கௌரவ பொருளாளரினதும் முன்னிலையிலன்றி, எத்தகையதுமான எந்தச் சாதனத்திலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் தம் சமுகத்தில் இலச்சினை பொறிக்கப்பட்டதென்பதற்கு எண்பிப்பாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடல் வேண்டும்; அத்துடன் அத்தகைய கையொப்பமிடல், சாட்சியொருவராக எவரேனும் ஆள் கையொப்பமிடுவதற்குத் தனிவேறானதாயிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

10. இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், குடியரசினது உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது. குடியரசினதும் ஏனையோர்களதும் உரிமைகளைப் பேணுதல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150; (வெளிநாடு) ரூபா 200; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.